Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆவணி 03    (19 - 08 - 1992)    புதன்கிழமை    ஓசை 183

## காணாமல் போனோர் பதிவிற்கு யாழ். செயலகத்தில் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காணாமல் போனவர்களைப் பதிவு செய்வதற்கான அலுவலகம் ஒன்று யாழ். செயலகத்தில் திறக்கப்பட்டிருக்கிறது. காணாமல் போனவர்களது உறவினர்கள் இவ் அலுவலகத்தில் காணாமல் போனவர் தொடர்பான விபரங்களை பதிவு செய்யலாம். இதுவரை சுமார் 70 பேர் காணாமல் போனமை தொடர்பாக பதிவு செய்துள்ளனர். (க)

## நாடு திரும்பும் அகதிகளுக்கு வவுனியாவில் முகாம்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்புவோரைத் தங்க வைக்க வவுனியாவில் அகதி முகாம்கள் உருவாகும். இதற்கென யு. என். எச். சி. ஆர் எனப்படும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு மூன்று இடங்களைத் தெரிவு செய்துள்ளது.

தமிழகத்திலிருந்து கப்பல் மூலமும், விமான மூலமும் வரும் அகதிகளின் பராமரிப்பு பொறுப்பை யு என். எச். சி. ஆர் ஏற்கவுள்ளது தெரிந்ததே. தாண்டிக்குளம், நெலுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மீனவருக்கு நோர்வே செஞ்சிலுவை உதவி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதி மீனவர்களுக்கு உதவியளிப்பதற்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்திருக்கிறது

மேற்படி பகுதிகளில் உள்ள மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சுமார் 3200 குடும்பங்களுக்கே முதற்கட்டமாக இவ் உதவிகள் வழங்கப்பட உள்ளது.

மீன்பிடி உபகரணங்களான மீன்வலை, மீன்பிடிப்படகு மற்றும் ஏனைய கருவிகள் வழங்குதல் உட்பட கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய நடைமுறைகள் இவ் உதவித்திட்டத்தில் அடங்கியிருக்கும் என்று கூறப்படுகிறது.

இப்பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களது நிலைமை குறித்து மேற்படி செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு விடுதியில் இரு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

வட பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் தமிழ்க் குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டனர்'

கடந்த 15 ஆம் திகதி 'ஐலன்ட் லொட்ஜ்' அறை ஒன்றில் மேற்படி இரு இளைஞர்களும் தங்கியிருந்த சமயம் அங்குவந்த ஈ.பி.டி.பி குழுவைச் சேர்ந்தவர்கள் இவ்விருவரையும் கைது செய்து சென்றனர்.

இரவு வேளையில் இடம் பெற்ற இக் கைது சம்பவத்தை அடுத்து இந்த விடுதியில் தங்கியிருந்த ஏனைய தமிழ்ப் பொது மக்கள் அச்சமடைந்தனர் என்று குறிப்பிட்ட விடுதியில் தங்கியிருந்து விட்டு யாழ். நோக்கி வந்த ஒருவர் தெரிவித்தார். (தி)

## முஸ்லிம் ஆயுதபாணிகளால் தமிழ் இளைஞர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரில் ... தெரிவிக்கப்படுகிறது.

இந்த முஸ்லிம் கும்பலில்

★ பொன்னாலை ★ அராலி ★ யாழ்.நகர்

# குடாநாட்டின் மேற்கு கரையோரம் பரவலான எறிகணைத் தாக்குதல்

## பாதுகாப்புப் பிரதேசத்தினுள் 50 கலிபர் சன்னங்கள்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியை அண்டியுள்ள யாழ்.குடாநாட்டின் மேற்கு, தெற்குக் கரையோரப் பகுதிகள் நேற்றும், நேற்று முன்தினம் இரவும் பலத்த எறிகணைத் தாக்குதலுக்கும் 50 கலிபர் தாக்குதலுக்கும் இலக்காகின. யாழ். நகரின் கரையோரப்பகுதி, அராலித்துறை, பொன்னாலைப் பகுதி என்பனவே தாக்குதலுக்கு இலக்கான பகுதிகளாகும் இதேவேளை மண்டைதீவுப் பகுதியில் இருந்து இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது யாழ்.நகரிலுள்ள பாதுகாப்பு வலயத்தினுள்ளும் சன்னங்கள் புகுந்தன.

காரைநகர், ஊர்காவற்றுறைப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவும், நேற்றுப் பகலும் பொன்னாலை, மூளாய். அராலித்துறை பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

எறிகணைத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஊர்காவற்றுறைகாவலரண்களிலிருந்து மக்கள் குடியிருப்புகளை நோக்கி தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடற்படைதளத்தில் துருப்புகள் நடமாட்டம் அதிகரிப்பு

(நமது நிருபர்)

காரைநகர்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா கடற் ... படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன ... இராணுவத்தினர் கடற்படைத்தளத்தில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

மானியக்குழு மீதான வழக்கு விசாரணை

## வடகிழக்கு மாணவர்களுக்கு பல்கலை அனுமதியில் அநீதி

(கொழும்பு)

கல்வியாண்டு 1991/92 பல்கலைக்கழக அனுமதியில் வட-கிழக்கு மாகாணங்களுக்கு பல்கலைக் கழகங்கள் மானியக் குழு பாராபட்சம் காட்டுவதாகக் குற்றம் சாட்டித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, இன்று கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பல்கலைக் கழக அனுமதி தொடர்பாக பல்கலைக் கழகங்கள் மானியக் குழு மறுபரிசீலனை செய்து நீதி வழங்கும் என்ற நம்பிக்கையிழந்த நிலையில், தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியில் சம சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும், நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்குமட்டும் அனுமதி தொடர்பாக பல்கலைக் கழகங்கள் மானியக் குழு எடுக்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு கோரியும் வட பகுதியிலுள்ள கல்லூரி மாணவர் ஒருவரால் இவ் வழக்குத் தாக்கல் செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நியமனம் பெற்றோரை வருகைதர கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 42 பேர் பட்டதாரி பயிலுனர் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களில் விஞ்ஞான வர்த்தக, கலை பட்டதாரிகள் அடங்குகின்றனர்.

இவர்கள் கற்பிக்கக் கூடிய பாடங்கள், தனியாள் விபரங்கள் அறிந்து பொருத்தமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

சமுகமளிக்காத ஆசிரியர்களை

## கடமைக்குத் திரும்புமாறு பணிப்பாளர் அறிவிப்பு

றில் மேற்படி இரு இளைஞர்களும் தங்கியிருந்த சமயம் அங்குவந்த ஈ.பி.டி.பி குழுவைச் சேர்ந்தவர்கள் இவ்விருதியில் தங்கியிருந்து விட்டு யாழ். நோக்கி வந்த ஒருவர் தெரிவித்தார். (தி)

## முஸ்லிம் ஆயுதபாணிகளால் தமிழ் இளைஞர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரில் சிறிலங்கா இராணுவத்தின் துணையுடன் முஸ்லிம் கும்பல் ஒன்று தமிழ் இளைஞர்களை கைது செய்து கடத்திவருவதாக அறியப்படுகிறது.

இராணுவத்துடன் இணைந்து வெள்ளைநிற வாகனமொன்றில் செல்லும் இக் கும்பல் தமிழ் இளைஞர்களை கைது செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முஸ்லிம் கும்பலில் உள்ளவர்கள் அனைவரும் ஆயுதபாணிகளாகத் திரிவதாகவும் இவர்களின் நடவடிக்கையை அடுத்து தமிழ் பொது மக்கள் பீதியடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதே சமயம் இக் கடத்தல் கும்பலினால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் பலர் இதுவரை விடுதலைசெய்யப்படவில்லை. (தி)

வவுனியாவில்

## இராணுவத்தால் ட்ராக்டர் தடுத்து வைக்கப்பட்டன

(வவுனியா)

ஈரற்பெரியகுளம் இராணுவ சோதனை முகாமில் மேலும் பல ட்ராக்டர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சிறிலங்காஇராணுவத்தினர் சோதனையில் ஈடுபட்ட சமயம் இவற்றில் தடைசெய்யப்பட்ட பொருள்கள் காணப்பட்டதை அடுத்து தடுத்து வைக்கப்பட்டன.

குறிப்பிட்ட ட்ராக்டர்கள் வவுனியாவிற்கு வடக்கே பொருள்களை ஏற்றிவருவதற்காக சோதனை நிலையப் பகுதியில் தரித்து நின்ற போதே தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறியப்பட்டது. (தி)

## முஸ்லிம்களின் உரிமையை அங்கீகரிக்க வேண்டும்

(கொழும்பு)

முஸ்லிம்களின் உரிமைகளை தமிழ்க்குழுக்கள் தாராளமான மனதுடன அங்கீகரிக்க மறுப்பதாலேயே தமிழர் பிரச்சினைக்கான தீர்வு பின்தள்ளப்படுவதாக முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் முஸ்லிம்களின் உரிமைகளைத் தமிழர்கள் அங்கீகரித்தால் தமிழர்பிரச்சினை விரைவில் தீர்வுக்கு வந்துவிடும் என்றும் கூறியுள்ளார்.

## தேவையான மண்ணெய் அனுப்புவது சாத்தியமில்லை

### - கூட்டுப்படை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அளவு மண்ணெண்ணெய் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பது சாத்தியமற்றது என்று கொழும்பு கூட்டுப்படைகளின் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

கடந்த 13 ஆம் திகதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையில் கொழும்பில் நடைபெற்றகூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மண்ணெண்ணெயின் அளவு கூட்டுப்படைகளின் தலைமையகத்தால் கணக்கிடப்பட்டிருக்கிறது.

அதேவேளை ''குமண'' கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்குப் போதுமான மண்ணெண்ணெய் அனுப்பிவைக்கப்படும் என்று கூட்டுப்படை தலைமையகம் யாழ். அரச அதிபருக்கு உறுதியளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. [க]

## காரைநகர் கடற்படை தளத்தில் துருப்புகள் நடமாட்டம் அதிகரிப்பு

(நமது நிருபர்)

காரைநகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா கடற்படைத்தளத்தில் என்றுமில்லாதவாறு இராணுவ மற்றும் கடற்படையினரின் நடமாட்டங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு தினங்களாக பலாலியிலிருந்து உலங்கு வானூர்தி மற்றும் கப்பல் மூலமாக பெருந்தொகையான இராணுவத்தினர் கடற்படைத்தளத்தில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதே வேளை கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் உலங்கு வானூர்திகளின் நட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாற்றங்கள் எதுவுமின்றி ராணுவ நடவடிக்கை தொடரும்

### இராணுவ தளபதி சிசில் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் சில மாற்றங்களுடன் தொடர்ந்து நடைபெறுமென்று சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண கூறியுள்ளார்.

கொழும்பில் கடந்த திங்களன்று செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில், புலிகள் தற்போது பலவீனமடைந்துள்ளனர் என்றும். அவர்கள் தற்போது என்ன செய்வது எனத் தெரியாமல் திகைத்து நிற்கின்றனர் என்றும் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் கண்ட படையினர் காவலரணை விட்டு ஓட்டம்

### வெடிபொருள்கள் மீட்பு

மணலாறு மாவட்டத்தில் உள்ள சிலோன் தியேட்டர் முகாமிற்கு அண்மையில் இருந்த சிறிலங்கா படையினரின் காவலரண்மீதுவிடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடாத்தினர்.

நேற்றுக் காலை 6.30 மணி தொடக்கம் 5 நிமிட நேரம் நடாத்தப்பட்ட இத்தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவம் காயங்களுடன் காவலரணைக் கைவிட்டு தப்பியோடி விட்டது.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட இராணுவப்பொருள்களின் விபரம் வருமாறு:

★ ஐ. எம். ரவை - 1770
★ 40 எம். எம்.
எறிகணை - 39
★ ஏ. கே. மகசீன் - 07
★ ஏ. கே. கோல்சர் - 02
★ கிட்பாக் - 01
★ கெல்மட் - 03
★ சப்பாத்து சோடி - 02
★ சின்ன கிளைமோர் - 02

## வீரச்சாவு

### வீரவேங்கை நதீஸ் ஆதரவாளர் ஜீவானந்தம்

17-08-92 அன்று இரவு 8-00 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு என்னும் இடத்தில் பதுங்கியிருந்த சிறிலங்கா பொலிசாரும், புளொட் தேசத் துரோகிகளும் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

வில்லை என்றும், நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்குமட்டும் அனுமதி தொடர்பாக சமுகமளிக்காத ஆசிரியர்களை பாடங்கள், தனியாள் விபரங்கள் அறிந்து பொருத்தமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடமைக்குத் திரும்புமாறு பணிப்பாளர் அறிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் 75 ஆசிரியர்கள் நீண்ட கால லீவில் எதுவித அறிவித்தலும் இன்றிப் பாடசாலைகளுக்கு வருகை தராதிருக்கின்றனர்.

இவ்வாறான ஆசிரியர்கள் இம்மாதம் முப்பத்தொராம் திகதிக்கு முன் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறினால், அவர்கள் தாமாகவே வேலையிலிருந்து விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவர் எனக் கிளிநொச்சி பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அறிவித்துள்ளார்.

## உயர்தர பரீட்சை முடிவுகள் கொழும்பில் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர விசேட பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று கொழும்பில் வெளியாகியுள்ளன.

யாழ். மாவட்ட மாணவர்களது பெறுபேறுகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (க)

## ராமநாதன்நுண்கலைபகுதி தனி நிறுவனமாக மாற்றம்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவின் கீழ் இயங்கிய இராமநாதன் நுண்கலைப் பகுதி இப்போது தனித்துறை சார்ந்த நிறுவனமாகியுள்ளது. இதன் தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா நியமனம் பெற்றுள்ளார். மூன்று இணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடக சங்கீதம், வாத்தியங்கள், நடனம் (பரதநாட்டியம்) ஆகிய துறைகளுக்கே இணைப்பாளர்களாகமுறையே எஸ். பத்மலிங்கம், நா.சோமாஸ்கந்தசர்மா, திருமதி பு.உமாசங்கர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழகங்கள் மானியக்குழு இராமநாதன் அக்கடமிக்கு மூன்று மேலதிக விரிவுரையாளர்களையும் நியமித்திருக்கிறது.

## அரச அதிபருக்கு பதிலாக மாவட்ட ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அரசாங்க அதிபர் என்ற பதவி இல்லாதொழிக்கப்பட இருக்கிறது. புதிய நிர்வாகசேவைத் திட்டத்தின் கீழ் மேற்படி நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்பட உள்ளது.

பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய நிர்வாக சேவைத்திட்டத்தின் கீழ் மாவட்ட அரசாங்க அதிபர் என்ற பதவி இல்லாதொழிக்கப்பட்டு மாவட்ட ஆணையாளர் என்ற பதவிமட்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருப்பதாக கூறப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

**தமிழினம் காக்கும்**
**வனவளம் காப்போம்**

## வரி விளம்பரம்

### மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்

மீரா வெளியீடு ''சிதம்பர திருச்செந்திநாதன்'' எழுதிய இந்த நாவல்... துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வந்தபோதும் தளராத மன உறுதியுடன் இந்த மண்ணை நேசித்து மானமுடன் தலைநிமிர்ந்து வாழமுனையும் குடும்பத்தின் கதை. (3039)

### புத்தக கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### பெற்றுக்கொள்ளவும்

12 - 08 - 92 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் கொக்குவில் கோவில் வீதியில் தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு உடுவில் தெற்குசித்தி விநாயக ஆலய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப்பெறவும் (3029)

### இலக்கிய கூட்டம்

சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் ''மதி'' மாணவர் கல்வி வளர்ச்சிக்கழக இலக்கிய மன்றக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. க. அகிலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க வலிகாமம் பிரிவுப் பொறுப்பாளர் திரு சத்யா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (11) (09)

### 13 வது ஆண்டு நிறைவு விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசார மனறத்தின் பரமானந்தசிவம் ஞாபகார்த்த நூல்நிலையத்தின் பதின்மூன்றாவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் நான்கு மணியளவில் வட்டுக்கோட்டை கண்ணகைஅம்மன் கோவிலடியில் நடைபெறவுள்ளது

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வட்டுக்கோட்டை பிரிவுப் பொறுப்பாளர் தேசியக் கொடியை ஏற்றிவைக்க தொடங்கும் இவ் விழாவில் செல்வி யோகலட்

## தரம் 2 அதிபர்களுக்கான பரீட்சை முடிவுகள்

(நமது நிருபர்)

அதிபர் தரம் இரண்டிற்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு கல்முனை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு, திருக்கோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் விபரம் இங்கு தருகிறோம்.

**மட்டக்களப்பு கல்முனை:**

எம். நாகப்பன் [மட்டக்களப்பு இந்துக் கல்லூரி], வி. குணாளன் [ஆர். கே. மகா வித்தியாலயம் அக்கரைப்பற்று], பி. ஆனந்தராஜா [பெரியகல்லாறு மகாவித்தியாலயம்], ஏ. எஸ். யோகராஜா [சென். மைக்கல் கல்லூரி மட்டக்களப்பு], என். சிதம்பர [illegible] மைக்கல் கல்லூரி மட்டக்களப்பு], ரி.ராஜகுமாரி [மட்டக்களப்புஇந்துக் கல்லூரி], வன்னியசிங்கம் [செட்டிபாளையம் மகாவித்தியாலயம்], சி. நடராஜா [செட்டிபாளையம் மகாவித்தியாலயம்], ஏ. வேதநாயகம் [பெரியநீலாவணை விஷ்ணு மகாவித்தியாலயம்], கே. முத்துலிங்கம் [விபுலானந்தர் மகாவித்தியாலயம் காரைதீவு], வி. பிரபாகரன் [அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயம்], ஜி சௌந்தரராஜா [அரசடி மகாவித்தியாலயம்], எஸ். ராசேந்திரன் [பெரியகல்லாறு மகாவித்தியாலயம்], கே. சின்னத்துரை [அரசடி மகாவித்தியாலயம்], எம். விமலானந்தன் [மண்டூர் மகாவித்தியாலயம்], கே. முருகேசபிள்ளை [கோமாரி எம். எம். ரி. எம். எஸ்,], ஏ. பேரின்பராஜா [செட்டிபாளையம் மகாவித்தியாலயம்], கே. சந்திரலிங்கம் [நாவிதன்வேலி அண்ணாமலை மகாவித்தியாலயம்] சுகிர்தராஜன் [கார்மேல் பாத்திமா கல்லூரி கல்முனை]. விஜயலக்ஷ்மி [கார்மேல் பாத்திமா கல்லூரி கல்முனை]

**வவுனியா—**

யூ. இராசையா (மகளிர்மகா வித்தியாலயம்) யூ உமாதேவன் (இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்) என்.மாணிச்கவாசகம் (வேலிக்குளம் ஜி ரி. எம். எஸ்) எம். ஜெயகரன் (பூவரசங்குளம் மகாவித்தியாலயம்) பி. ஜெயபாலேந்திரா (வவுனியா சி. சி ரி. எம். எஸ்)

**திருக்கோணமலை-**

கே. அரியநாயகம் (சென் மேரிஸ் கல்லூரி) எஸ். ஜெயபாலன் (சேனையூர் மகாவித்தியாலயம் மூதூர்) எ சுப்பிரமணியம் (சென் பிரான்சிஸ் சேவையர்மகாவித்தியாலயம்)

**கிளிநொச்சி-**

எஸ். கந்தசாமி (முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயம்) எஸ். பாஸ்கரன் (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்)

**மன்னார்**

எம். லியோன் றெவல் (மோட்டைகோட்டை ஜி. ரி எம். எஸ். மன்னார்) ஏ. பி. குரூஸ் (நானாட்டான் மகா விததியாலயம்) எம். நாராயண சாமி (முந்தல்தமிழ் வித்தியாலபம்)

**முல்லைத்தீவு**

கே. சோமசுந்தரம் (முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி) பி. சௌந்தரராஜன் (முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி)

## பரீட்சைப் பெறுபேறுகள் தபாலகத்தில் தேக்கம்

(பருத்தித்துறை)

1990 ஆம் ஆண்டு மார்சழி மாதம் நடைபெற்ற க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையின் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பல பரீட்சைப் பெறுபேறுகள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படாமல் கரவெட்டி தபாலகத்தில் கிடக்கின்றன.

முகவரிகள் சரியாக இல்லாதிருப்பதனாலேயே இப்பரீட்சைப் பெறுபேறுகளை உரியவர்களுக்கு விநியோகிக்க முடியாமல் இருப்பதாகவும் உரியவர்கள் அடையாள அட்டை, சுட்டிலக்கம் என்பவைவற்றைச் சமர்ப்பித்து பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாமென கரவெட்டி தபாலதிபர் திரு ச சிவராஜசிங்கம் அறிவித்திருக்கிறார். (25)

பத்திரிகையாளர்மீது தாக்குதல்

## விசாரணை முடிவுகள் அறிவிக்கப்படும்

## பருத்தித்துறை முதல் குமண வரை ஆயுதவேலி அமைக்கப்பட வேண்டும்

''எமது மண் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் பருத்தித்துறையிலிருந்து குமணவரை துப்பாக்கிகளால் ஆயுதவேலி ஒன்றை அமைக்க வேண்டும். இதற்கு யாவரும் முன்வர வேண்டும்''

— யோகி

இவ்வாறு யோகரத்தினம் யோகி தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை சுன்னாகம்பகுதியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக வீதி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

காலங்காலமாக சிங்கள இனவாதத்தாலும், வல்லாதிக்க சக்திகளாலும், தமிழ் மக்களாகிய நாம் பாதிக்கப்பட்டாலும் எமது மாவீரர்களின் தியாகங்களால் நாம் இவற்றை வென்றுவிட்டோம்.

எமது அரசியல் நிலைப்பாட்டினை நாம் விடுதலைப் பாதையின் முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளோம். நாம் எமது இன விடுதலைக்காக யாருடனும் நட்புக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

### சம்பள கொடுப்பனவு

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள், உத்தியோகத்தர்களின் யூலை மாத (25%) சம்பள கொடுப்பனவுகள் இன்று (19-8-92) இருந்து சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுகிறது என அதன் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## கலை நிகழ்ச்சிகளால் ஓரளவு மன ஆறுதல்

(மூதூர்) —மட்டு-திருமலை ஆயர்

இன்னல்கள் இடையூறுகளினால் அவதியுறும் தமிழ் மக்களுக்கு கலை நிகழ்ச்சிகள் ஓரளவு ஆறுதலை அளிக்கும் என மூதூர் ஞானப்பிரகாச மண்டபத்தில் புனித அந்தோனியார் மகாவித்தியாலய மாணவர்கள் நடத்திய கலை விழாவில் திருமலை—மட்டக்களப்பு ஆயர் டாக்டர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கூறினர். பல இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் இந்த விழா நடைபெற்றது. இவ்விழாவில் திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய பிதாஆயர்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை உரையாற்றும் போது தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்குமிடையே சிக்கித் தவிக்கின்றனர்

இக் காலகட்டத்தில் கலை நிகழ்ச்சிகள் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் படிப்பினைகளை வழங்கும் பணியில் அமைய வேண்டும்என அவர் கேட்டுக் கொண்டார்.

## அச்சுவேலிப் பகுதிகளில் குரக்கன்செய்கை அதிகரிப்பு

ஆடிப்போகக் குரக்கன் செய்கை இவ்வருடம் அச்சுவேலிப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றது

அச்சுவேலி வடக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் சுமார் 750 பரப்பு நிலத்தில் குரக்கன் பயிர்செய்கைபண்ணப்பட்டுள்ளது.

இதில் பெரும்பாலான விவசாயிகள் ''கெயர்'' ஸ்தாபனத்தின் விவசாயத் திட்டத்தின் கீழ் உதவிகளைப்பெற்று குரக்கன் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதிகளில் சுமார் 210 விவசாயிகள் வரையில் இவ்வுதவிகளைப் பெற்றுப் பயன் அடைந்துள்ளதாக அறியப்படுகின்றது. [42]

## தீர்வையற்ற இறக்குமதியை கண்காணிக்க விசேட பிரிவு

(கொழும்பு)

தீர்வை விலக்கு அளிக்கப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தும் தொழிற்சாலைகளையும் களஞ்சிய அறைகளையும் சோதனையிடுவதற்காக நிதியமைச்சினால் புதிய கண்காணிப்புப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப் பிரிவில் பயிற்சிபெற்ற 14 சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளனர் எனவும், சுங்க கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் இவர்கள் சுங்க பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் உற்பத்தி, ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக தீர்வையற்ற பொருள்களை இறக்குமதி செய்ய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்ட உள்ளூர், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விதிகளையும், கட்டளைகளையும் கடைப்பிடிக்க இப்பிரிவு உதவியளிக்கும் என்றும் தெரி

### உதைபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் சென்றோக். வி. கழகம் அணி அதனை எதிர்த்தாடிய நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாடடுக்கழக அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இப்போட்டி இடம்பெற்றது.

★ ★ ★

அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் நினைவாக நடத்தப்பட்டு வரும் ஏழு வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருநகர் பாரதி'பி'பிரிவு அணி வெற்றி பெற்றது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் பாரதி விளையாட்டுக்கழக 'பி' பிரிவு அணி அதனைஎதிர்த்தாடிய கொழும்புத்துறை ஜெற்லையின்ஸ் விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது. நடுவராக எஸ். நரேந்திரன் கடமையாற்றினார். [42]

### ஆதாரம் காட்டி பெறவும்

கடந்த 13-8-92 வியாழக்கிழமை அன்று கொட்டடி சிகிச்சை நிலையத்தில் தவறவிடப்பட்ட மோதிரம் ஒன்று சுகாதாரத் தொண்டர்களால் கண்டெடுக்கப்பட்டு மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 08 — 04 — 1964



வீரச் சாவு 19 — 08 — 1989

### கப்டன் வண்ணம்

(சீவரெத்தினம் கலைஜீவன்)

(கிளி. மாவட்ட அரசியற் பொறுப்பாளர்)

தாயக மீட்பில் உனை யிழந்து
ஆயிரம் நாட்கள் அதற்குள் ஓடிப்
போயின என்றாலும் உன் நினைவு
போகவில்லை என்பதனால் உன்வழியில்
தொடர்கிறோம் நாமும்.

— குடும்பத்தினர்.

கனகபுரம்,
கிளிநொச்சி
(சி 4897)

கோட்டை பிரிவுப் பொறுப்பாளர் தேசியக்கொடியை ஏற்றிவைக்க தொடங்கும் இவ்விழாவில் செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், திருமதி நாச்சியார் மற்றும் திருவாளர்கள் யோகானந்தசிவம், சி.சி. வரதராசா, வே. செ. தனபாலன், உமாபதிசிவம், பரமேஸ்வரன், கைலாசபிள்ளை, நா. க. தங்கரத்தினம் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து பண்ணிசை, நடனம், கதாப்பிரசங்கம் மற்றும் புரட்சி கானங்கள் என்பவையும் இடம்பெவுறள்ளது.

## விசாரணை முடிவுகள் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஒரு கூட்டத்தினர் பத்திரிகையாளர் கமராவைப் பறித்து நாசமாக்கியதாகச் செய்யப்பட்ட புகார்கள்குறித்து பொலிசார் நடத்தும் விசாரணையின் முடிவுகள் பற்றி வாராந்த அமைச்சர்கள் மாநாட்டில் அறிவிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

தங்களின் கமாரக்களைச் சேதப்படுத்தியவர்களைத் தங்களால் அடையாளம் காட்ட முடியும் என்றும், அடையாள அணி வகுப்பு எதுவும் நடத்தப்படவில்லை என்றும் நிருபர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

பத்திரிகையாளர் மீது அடிக்கடி தாக்குதல் இடம் பெறுவதாகவும் அவர்கள் அமைச்சரிடம் கூறினர்.

14 சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளனர் எனவும், சுங்க கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் இவர்கள் சுங்க அதிகாரிகளாக நியமிக்கப்

கப்பட்ட உள்ளூர், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விதிகளையும், கட்டளைகளையும் கடைப்பிடிக்க இப்பிரிவு உதவியளிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### போதை பொருள் ஒழிப்பு

## செயல் திட்டங்களுக்கென 10,000 அமெ. டாலர் உதவி

(கொழும்பு)

போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக சர்வதேச தொழில் அமைப்பு பத்தாயிரம் அமெரிக்க டாலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நன்கொடையாக வழங்கப்படும் இந்நிதியைப் பயன்படுத்தி போதைப் பொருள் பாவனை ஒழிப்பு சம்பந்தப்பட்ட செயல் திட்டங்களை மேற்கொள்ள புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறைஅமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

## தமிழகத்திலிருந்து வாரம் இருமுறை அகதிகள் வருவர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து திங்கட்கிழமைகளிலும், வியாழக் கிழமைகளிலும் வாரத்திற்கு இரு தடவைகள் இலங்கை அகதிகள் விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளனர் என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் சுற்றில் இலங்கைக்கு வரவிருந்த 30,000 அகதிகளில் 23,631 பேர் ஏற்கனவே வந்துள்ளனர் என்றும்,

15,000 அகதிகள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும், ஏனையோர் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமது இல்லங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக புனர்வாழ்வு சபை அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.


போயின என்றாலும் உன் நினைவு
போகவில்லை என்பதனால் உன்வழியில்
தொடர்கிறோம் நாமும்.

கனகபுரம்,
கிளிநொச்சி.

– குடும்பத்தினர்
(சி, 4897)



# அறிவித்தல்

கேட்டுவாங்குங்கள்

## காற்றூட்டப்பட்ட புத்தூக்கி(REFRESHER) குளிர்பானங்கள்

19 - 08 - 92 முதல் எமது குளிர்பான விநியோக முகவர்களாக, யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ''இனிமை குளிர்பான விநியோகஸ்தர்'' என்னும் ஸ்தாபன பெயருக்கு திருமதி ரஜனி பாலச்சந்திரன், திருமதி ரஜனிமாலா இரவீந்திரநாயகம் என்பவர்கள் இணைந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் ''இனிமை'' விநியோகஸ்தரை நாடவும். ஏற்கனவே எமது விநியோக ஊழியர் மூலம் கடன் கொள்வனவு செய்த வர்த்தக நிலையங்கள் புதிய விநியோகஸ்தருடன் வரும் எமது ஊழியரிடம் நிலுவைகளையும் பெட்டி, போத்தல்களையும் வழங்கி உதவுமாறு கேட்கின்றோம்.

ஆதரவுக்கு நன்றி.

### குளிர்பான விலைமாற்றம் (19-08-92 முதல்)

| | தயாரிப்பவர்விலை | விநியோகஸ்தர்விலை | சில்லறைவிற்பனையாளர்விலை |
|---|---|---|---|
| 300 மி. லீற்றர் | 8 50 | 9.00 | 10.50 |
| 400 மி லீற்றர் | 10.50 | 11.00 | 12.50 |

**பொதுமுகாமையாளர்**

யாழ். பகுதி தெங்கு ப. பொ. கூ. சங்கங்களின் கொத்தணி
யாழ்ப்பாணம்

(3041)



அகில இலங்கை காந்திசேவா சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 30 - 08 - 92 ஞாயிறு காலை 10.00 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு அதிகபட்சமான சேவைகளை வழங்குவதற்கான வழிவகைகளை காணவேண்டி உள்ளமையால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம். தனிப்பட்டஅழைப்புகள் அனுப்பப்படவில்லை.

நன்றி.

காந்தி நிலையம்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

செயலாளர்
அகில இலங்கை காந்திசேவா சங்கம்
(3044)



## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 19

1988 ஆம் ஆண்டு மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**கோபு** [கதிர்காமத்தம்பி தர்மராசா - புதூர், மட்டக்களப்பு]

முல்லைத்தீவில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். றொபேட்** (சுந்தரம் லோகநாதன்- கிருஸ்ணபுரம், கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனைப் பகுதியில் இந்தியப் படையினரால் கொலை செய்யப்பட்ட -

**லெப். தேவா** (நாராயணன் சாமித்தம்பி குமார்- பாண்டிருப்பு, கல்முனை, அம்பாறை)

மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

**கப்டன் வண்ணன்** (சீவரத்தினம் கலைஜீவன் - கனகபுரம், கிளிநொச்சி)

யாழ். கரவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எம்மைப் பிரிந்த -

**பிரியதர்சன்** (பத்மநாதன் பரமேஸ்வரன் - புத்தூர் கிழக்கு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வீட்டு வேலைகள் செய்பவரான இளம்பெண் - வந்தாறுமூலையைச் சேர்ந்த விவசாயி ஆகிய 2 தமிழர்கள் - பெரியபுல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

திருக்கோணமலை, அலஸ் தோட்ட முகாம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4912]

## சிந்தனைக்கு

கொல்லைப்புற வேலிக்கு அப்பாலிருந்து உன்னைப் பார்த்து புன்சிரிப்புச் செய்பவன். ஆனால், வேலியைத் தாண்டி ஏறி வராதவனே நல்ல அண்டை வீட்டுக்காரன்.

- ஆர்த்தர் பேயர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


# இணைப்பதென்பது அர்த்தமற்றது

"வடக்கும் கிழக்கும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாகும். இவற்றை இணைக்கவேண்டும் என்று கேட்க வேண்டிய அவசியமில்லை. அவை இணைந்துதான் இருக்கின்றன. இணைக்கவேண்டும் என்ற பேச்சிற்கு இடமில்லை" இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமாகிய தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான் வற்புறுத்திய இந்த அம்சத்தினை இப்பகுதியில் முன்னர் ஒருதடவை நாமும் வற்புறுத்தியிருந்தோம். அதாவது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் என்பது தமிழர் தாயகத்தின் இருவேறு நிர்வாக அலகுகள். இந்த நிர்வாக அலகுகள் பூகோள ரீதியாக அன்றும், இணைந்துதான் இருந்தன. இன்றும் இணைந்துதான் இருக்கின்றன. அதைவிடுத்து தமிழர் தாயகம் எப்பொழுதும் பிரிந்து இருக்கவில்லை. அதை இணைப்பதென்பது இல்லாததொன்றைச் செய்ய முற்படுவது போன்றதாகும்.

ஆனால், இன்றுள்ள பிரச்சினை தமிழர் தாயகத்தில் காலனியாதிக்கவாதிகள் நிர்வாக வசதிக்காக மேற்கொண்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் என்ற நிர்வாக அலகுகளை ஒன்றாக இணைப்பது என்பதேயாகும். தமிழ் மக்களைப் பொறுத்து தமிழர் தாயகம் ஒரே நிர்வாகஅலகின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்பது முக்கியமான கோரிக்கையாகும் சிங்களப் பேரினவாதமோ வடக்கு - கிழக்கு என்ற நிர்வாக அலகின் அடிப்படையில் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்யப் பார்க்கின்றது. அதாவது துண்டாடிவிடப்பார்க்கின்றது.

இதற்கென சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாக திட்டமிட்ட அடிப்படையில் செயலாற்றி வருகின்றது. அதற்கு குடியேற்றத்திட்டங்களைப் பிரதான கருவியாகப் பயன்படுத்துகின்றது. இக்குடியேற்றங்களின் மூலம் இரண்டு பிரதான இலக்குகளை எட்ட முனைகின்றது. ஒன்று, தமிழர் தாயகத்தைத் துண்டாடுவது, இரண்டு தமிழர் தாயகத்தின் தென்பாகத்தில் சிங்களவரின் விகிதாசாரத்தை உயர்த்துவது.

இதில் தமிழர் தாயகத்தின் பூகோள ரீதி

# செக்கோஸ்லவாக்கியா: சமாதான விவாகரத்து

லோறன்ஸ் திலகர்

(நேற்றைய தொடர்ச்சி)

தனிநாட்டையும் வலியுறுத்திய கட்சிகளே வெற்றி பெற்றுள்ளன.

யூன் முதல் வாரத்தில் நடைபெற்ற தேர்தலில் சுதந்திர ஸ்லோவாக்கியத் தனி நாட்டைத் தேர்தல் ஆணையாக முன்வைத்த கட்சிகளே ஸ்லாவியக் குடியரசில் வெற்றி பெற்றுள்ளன. பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி முதலாவதாக வந்தஜனநாயக ஸ்லோவாக்கியவிற்கான இயக்கத்தின் (*Movement For Democratic Slovakia*) தலைவர்மெசியர் (*Meciar*) ஸ்லோவாக்கிய இறைமையை, சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து தமக்கென்றதொரு அரசியல் யாப்பை ஏற்படுத்தி தமது ஜனாதிபதியை தெரியப்போவதாக அறிவித்துள்ளார். இது தற்போது இருக்கும் செக்கோஸ்லவாக்கிய அரசியல் யாப்புக்கும் அதன் ஜனாதிபதி வக்லாவ் காவலுக்கும் (*Vaclav Havel*) எதிராக புரட்சிக் கொடி தூக்குவதாக இருக்கின்றது. ஆயினும் செக் குடியரசானது ஸ்லாவிய மக்களின் குடியொப்பத்திற்கு மதிப்பளிக்கும் என்றும், தனது குடியரசோடு இணைத்து வைப்பதற்காக போரில் ஈடுபடாது என்றும் நம்பப்படுகின்றது.

செக் குடியரசில் நாட்டின் ஒற்றுமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் வலியுறுத்திய கட்சிக்கே பெரும்பான்மையான செக் மக்கள் வாக்களித்தனர். ஆயினும் ஸ்லாவியக் குடியரசில் இப்பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்லாவிய மக்களின் சுயநிர்ணய உரிமையே இங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது இத்தீர்ப்பை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளப்போகின்றது ஒருநாட்டின் பிரிவினைக்கு இருபகுதி மக்களும் சம்மதிக்கவேண்டும் என்றவாதத்தை இவ்வுதாரணம் தவிடுபொடியாக்கியுள்ளது. இப்பிரிவினைக்கு மொழிவேறுபாடும் (செக் மொழி, ஸ்லாவிய மொழி) மத வேறுபாடும் (செக் மக்கள் மதநம்பிக்கை குறைந்தவர்களாகவும், ஸ்லாவிய மக்கள் றோமன் கத்தோலிக்கர்களாகவும் இருப்பது) பொருளாதார ஏற்றத்தாழ்வும் காரணமாக கூறப்படுகின்றது. தமது பொருளாதாரத் தாழ்விற்கு செக் குடியரசுடன் இணைந்து ஒரு நாடாக இருப்பதே காரணம் என்று ஸ்லாவிய மக்கள் நம்புகின்றனர். 53 இலட்சம் மக்களை கொண்ட ஸ்லோவாக்கியாஎனும் புதியநாடுமிக விரைவில் உருவாகுவதுடன் பலவருட காலமாக சமஷ்டி ஆட்சியில் நிலவிய கூட்டு வாழ்வும் சமாதான ரீதியாக இல்லாது போய்விடும். ஆயினும் பொருளாதாரம், பாதுகாப்பு, நிதியம் ஆகியவை தொடர்பாக இணைப்பை ஏற்படுத்துவதாக, புதிய ஒழுங்கு முறைகளை அமைத்துக் கொள்ளலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.




செக் குடியரசுத் தலைவர்களுக்கும், ஸ்லாவியக் குடியரசுத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. செக். குடியரசு, ஸ்லாவியக் குடியரசு தனிநாடாகப் பிரிந்து செல்வதை அங்கீகரித்துள்ளது. தனிநாடாகப் பிரிந்து செல்லாமல் ஒரு கூட்டமைவாக (*Con Federal*) இரு குடியரசுகளும் ஓர் அரசிற்குள் இருக்கலாம் என்ற செக் குடியரசின் கோரிக்கையை ஸ்லாவியக் குடியரசு ஏற்க மறுத்துள்ளது. அதே வேளை பொருளாதாரம், பாதுகாப்பு ரீதியாக இரண்டு சுதந்திர அரசுகளும் இணைந்து (*Union*) செயற்படலாம் என்ற ஸ்லாவியக் குடியரசின் ஆலோசனையையும் செக் குடியரசுஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் இவ்வருடம்புரட்டாதி மாத முடிவிற்குள், பிராரிஸ்லாவா (*Bratislava*) என்பதைத் தலைநகராகக் கொண்டு, ஸ்லோவாக்கியா எனும் புதிய நாடு உருவாக உள்ளது.

முன்னைய யூகோஸ்லாவியாவில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகின்றது. சுதந்திரப் பிரகடனம் செய்த பொஸ்னியா -கெஸிகோவினாவில் சண்டையை நிறுத்த ஐ நா. சபையும், ஐரோப்பிய சமூகமும் எடுத்த முயற்சிகள் தோல்வியையே தழுவி வருகின்றன. ஐரோப்பிய சமூகமும், ஐ. நா. சபையும், சேபியா, மொன்ரிறிகரோ (புதிய யூகோஸ்லாவியா) ஆகிய குடியரசுகள் மீது விதித்த பொருளாதாரத் தடையும் பெரும் பயனை அளித்ததாகத்தெரியவில்லை. ஐ. நா. சபையின் 1500 பேர் அடங்கிய சமாதானப்படை பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்த (*Peace Making*) முடியாத காரணத்தினால் சமாதானத்தைப் பேணவும் (*Peace Keeping*)முடியவில்லை. ஐ நா. சபையின் மூலம் யூகோஸ்லாவியாவில் பொருளாதாரத் தடையைக் கொண்டு வருவதில்முன்னின்ற ஐக்கிய அமெரிக்கா மனிதாபிமான (*Humanitarian*) நோக்கம் நிவாரணத்தைஅனுப்பும்நோக்கம்என்ற ரீதியில் தனது படையினை அனுப்புவது பற்றி ஆலோசித்து வருகின்றது. ஐரோப்பாவின் கொல்லைப்புறம், முதலாம் உலகப் போருக்குக்காரணமான பால்கன் பகுதியில் நடைபெறும் இச்சண்டை தொடர்ந்தால், ஐரோப்பிய ஸ்திரத் தன்மையே சீர்குலைந்துவிடும் என்று மேற்குலகம் அஞ்சுகின்றது முன்னைய யூகோஸ்லாவியாவில் இருந்து உருவான புதிய நாடுகளிலிருந்து ஏராளமான பகுதிகளைக் கைப்பற்றி, பரந்த சேபிய நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சேபியாவும்,அதன் தலைவர்ஸ்லோபோடன் மிலோசவிக்கும் ஐக்கிய அமெரிக்காவின் படைகளை எதிர் கொள்வதற்கான சூழ்நிலையைத் தொடர்ந்து ஏற்படுத்துவார்களா என்பதே கேள்விக்குறியாக உள்ளது. பொருளாதாரத் தடையுடன் கூடிய, இராணுவப் படையெடுப்புத் தொடர்பான மிரட்டல், சேபியாவை அடிபணிய வைத்துவிடும் என்று நம்பப்படுகின்றது. ஆயினும், சேபியா, ஏனைய புதிய நாடுகளிலிருந்து கைப்பற்றிய பகுதிகளை மீண்டும் அப்புதிய நாடுகளிடம் கையளிக்குமாறு மேற்குலகம் வலியுறுத்துமா, அல்லது இராணுவ பலம்மூலம் சேபியா கைப்பற்றியதை மேற்குலகம் அங்கீகரிக்குமா என்பதும் தெளிவாக இல்லை.

மேற்குலகிலிருந்து தூர உள்ள எமது தீவில் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் மேலாதிக்கத்திற்கு ஆதரவாகவா? அல்லது சிறுபான்மை தமிழ்த்தேசிய இனத்தின் நியாயமான அபிலாஷைகளுக்கு ஆதரவாகவா மேற்குலகம் செயற்படும் என்பதும் தெளிவாக இல்லை. யூகோஸ்லாவிய உதாரணத்தின்படி பார்த்தால், தமிழ் மக்களின் நியாயமான, சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவே மேற்குலகம் செயற்படவேண்டும். தற்போதைய உலக நிலைமையில், ஐக்கிய அமெரிக்காவின் ஆணையிலேயே சர்வதேச அரசியல் நகர்கிறது என்பதும், யூகோஸ்லாவிய பிரச்சினை தரும் பாடமாகும்.

இந்தோனேசியாவின் ஆதிபத்தியத்திற்கு உட்பட்டிருக்கும் சிறு தீவான கிழக்குத் தீமோரிலிருந்து இந்தோனேசியப் படைகள் வெளியேற வேண்டும் என்றும், அத்தீவு மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அம்மக்களின் சுதந்திரம் குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவேண்டும் எனவும், ஐக்கிய அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதாக வந்த செய்தியும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

நன்றி: எரிமலை

## ஸியா முஸ்லிம் மீது தாக்குதல்

# ஈராக் நிறுத்தாவிட்டால் ராணுவ நடவடிக்கை: புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் தென் பகுதியில் ஸியா முஸ்லிம்கள் மீதான

...த்தா விட்டால் ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க ஜனா...

...துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு ஜோர்ஜ் புஷ் அளித்துள்ள...

# விருதுநகரில் பொலிஸ் சூடு எட்டுப் பேர் காயம்

(சென்னை)

மதுரை- விருதுநகர் நெடுஞ்சாலையில் கள்ளிக்குடி என்னும் கிராமத்திற்கு அருகே போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்து கல் எறிவதில் ஈடுபட்ட கும்பலைக் கலைக்க பொலிசார் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

...தால் எவரும் உயிரிழக்கவில்லை. எனினும் எட்டு அரசஅதிகாரிகள் உட்பட பத்துப் பேர் காயமடைந்துள்ளனர்.

தென்னமநல்லூர் என்னும் கிராமத்திற்கு வந்து கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து இக் கிராமவாசிகள் ஆர்ப்பாட்...

தாயகத்தின் தென்பாகத்தில் சிங்களவரின் விகிதாசாரத்தை உயர்த்துவது.

இதில் தமிழர் தாயகத்தின் பூகோள ரீதியான இணைப்பைதுண்டிப்பதில் சிங்கள அரசாங்கம் நீண்டகாலமாகத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. அதில், குறிப்பிடக் கூடிய வெற்றியும் கண்டுள்ளது. பேரினவாத அரசாங்கத்தின் இந்நடவடிக்கை தமிழர் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. காலனித்துவ ஆட்சியாளர் நிர்வாக வசதிக்காக உருவாக்கிய அலகுகளை அடிப்படையாகக் கொண்டும், தம்மால் புதிதாக உருவாக்கப்பட்ட நிர்வாக, தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையிலும் தமிழர் தாயகத்தைக் கூறு போடப் பார்க்கின்றது.

இத் துண்டாடுதல் நடவடிக்கை சிங்கள குடியேற்றத்திட்டங்களுடன் இணைந்து நிர்வாக, தேர்தல் மாவட்டங்களின் மாற்றங்களுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சேருவாவெல தேர்தல் தொகுதியின் உருவாக்கமும், 'வெலிஓயா' மாவட்டத்தின் உருவாக்கமும் இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையே. இவை தமிழர் தாயகத்தை சிங்களவர் ஆக்கிரமிக்க வழி செய்வதோடு அல்லாமல் தமிழர் தாயகத்தை கூறுபோடுவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

தமிழர் தாயகத்தில் சிங்களவர் விகிதாசாரத்தை உயர்த்துதல் என்பதும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கையாகும். 1921 ஆம் ஆண்டு தென் தமிழீழத்தில், 4.8 வீதமாக மட்டும் இருந்த சிங்களவர்கள் 1981 இல் 24.9 வீதமாக அதிகரித்துள்ளனர். இதில் திருக்கோணமலை மாவட்டத்தின் அதிகரிப்பு மிகவும் உயர்வாகும். 1921இல் 4.4 வீதமாக இருந்த சிங்களவர் 1981 இல் 33.6 வீதமாக அதிகரித்துள்ளனர்.

இந்நிலையில்தான் தமிழர் தாயகத்தைத் துண்டாடாமல் காக்கவும், தமிழர் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கவும், நீண்ட ஒரு ஆயுதப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். தமிழர் தாயகப் பாதுகாப்பிற்காக ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகள் வீரச்சாவையும் தழுவிக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் வடக்கு கிழக்கை இணைத்தல் என்பது, தமிழர் தாயகத்தில் இரண்டாக உள்ள நிர்வாக அலகை ஒன்றாக்குவதே ஆகும். அதை விடுத்து தமிழர் தாயகத்தைஇணைப்பது என்பதோ, அன்றி தமிழர் தாயகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்துவதோ என்பதல்ல பிரச்சினை ஏனெனில், தமிழர் தாயகம் ஒரு பூகோளப்பரப்பாக இணைந்தேயுள்ளது, அதைத் துண்டாட நினைக்கும் சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சியை தடுத்து நிறுத்துவதே இன்று நடந்து கொண்டிருக்கும் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின்பிரதான இலட்சியம்.

(வாஷிங்டன்)

ஈராக்கின் தென் பகுதியில் ஸியா முஸ்லிம்கள் மீதான தாக்குதலை பாக்தாத் நிறுத்தா விட்டால் ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு ஜோர்ஜ் புஷ் அளித்துள்ள பேட்டியொன்றில் ஈராக்கிற்கான இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைன் தம்முடைய சொந்த மக்களையே மிருகத்தனமான ஒரு வகையில் தாக்கிக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேநேரம் ஸியா முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் தொடங்கியுள்ளன என்று லண்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெருக்கடி கால திட்டம் ஒன்றை வரையும் பணியில் பிரான்ஸ் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அயோத்தியில் இந்து ஆலயம் புதிய ஆதாரம் கண்டுபிடிப்பு

\- முரளி மனோகர் ஜோஷி

(டில்லி)

பதினொராம் நூற்றாண்டின் சர்ச்சைக்குரிய அயோத்தியாவில் ராமஜென்ம பூமிப் பகுதியில் இந்துக்கோவில் இருந்தமைக்கு அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் சான்றுகள் கிடைத்துள்ளதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷிதெரிவித்திருக்கின்றார்

இது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட புதைபொருள் ஆய்வுக்குழு ஒன்றின் கண்டு பிடிப்புக்களை உள்ளடக்கிய புகைப்படங்கள் சிலவற்றையும் அவர் வெளியிட்டுள்ளார். இக்குழுவினர் கடந்த மாதத்தில் தமது ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்

இக்குழுவினர் பூர்வாங்கமாக தோண்டும் வேலைகளை மேற்கொண்டபோது பெரியளவிலான செங்கல் சுவர் ஒன்றையும் மிகவும் நீளமான நூலகம் ஒன்றையும் கண்டு பிடித்துள்ளனர் ராமஜென்ம பூமியின் வாசலிற்கு அமைக்கப்பட்டதாக உள்ளது.

இதைவிட விஷ்ணு சிற்பத்தின் முக்கியமான பாகமொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையாளரிடம் தெரிவித்த ஜோஷி இந்துக் கோவில் ஒன்று இப்பகுதியில் இருந்துள்ளது என்பதனையே இது திட்டவட்டமாக காட்டுகிறது எனத் தெரிவித்தார்.

கற்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களின் குவியலில் இருந்தும் பல துண்டுகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது எனவும்இவையும் 11ஆம் 12ஆம் நூற்றாண்டு இந்துக் கோவில் ஒன்று இருந்தமைக்கான சான்றுகளையே விபரிக்கின்றன.

இப்படி கிடைத்துள்ள ஆதாரங்கள் இந்துக்கோவில் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் ராமஜென்மபூமி உள்ளது என்பதனையே எடுத்துக்காட்டுகிறது இந்த சர்ச்சைக்குரிய பகுதியில் தம்முடைய உரிமையை சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் அத்துடன் இந்த தீர்ப்பை சிறுபான்மையினர் ஏற்றுக் கொள்ள பிரதமர் நரசிம்மராவ் தூண்ட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவ் சிறுபான்மையின மக்களின் தலைவர்களும் நேரடியாக ராமஜென்ம பூமிப்பகுதிக்கு விஜயம் செய்து இந்த ஆதாரங்களை பார்வையிட வேண்டும் எனவும் அவர்அழைப்பு விடுத்தார்.

## குரங்குகளுக்குத் தொழிற்சங்கம்

(அமஸ்ரடாம்)

உலகிலேயே முதன்முறையாக குரங்குகளுக்கென ஒரு தொழிற்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒல்லாந்து நாட்டில் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# நடுத்தர ஏவுகணை பிரிதிவி நேற்று செலுத்தப்பட்டது

(டில்லி)

இந்தியா நடுத்தர வீச்சு ஏவுகணையான பிரிதிவியை நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு ஒரிசா மாநிலம் சாந்திபூரில் இருந்து பரீட்சார்த்தமாகச் செலுத்தி வைத்துள்ளது.

நேற்று முன்தினம் இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட இருந்ததாயினும் வான்லை காரணமாக கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

# ஈராக்கில் பணி முடிந்தது; ஐ. நா.ஆய்வுக்குழு அறிவிப்பு

(பக்தாத்)

ஐ. நாவின் ஆயுத ஆய்வுக் குழு ஈராக்கில் தனது பணிகள் முடிந்து விட்டதாகக்கூறியுள்ளது.

குழுவின் தலைவரான ரஷ்யாவைச் சேர்ந்த நிக்கிடாவ் மிடோவிச் தமது குழுவின் முழுப்பணியும் வெற்றிகரமாக முடிந்திருப்பதாக செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

பட்ட கும்பலைக் கலைக்க பொலிசார் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

வானை நோக்கி இத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றருந்த பேருந்து நிறுத்தப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து இக் கிராமவாசிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தமிழக பொலிசார் கூறியுள்ளனர்.

# பொஸ்னியா நிலை பற்றி ஐ. நா. விவாதம் நடத்தும்

(அங்காரா)

பொஸ்னியா ஹெர்சகோவினாவில்காணும்நிலைமையைப் பற்றி ஐ. நா. சபையில் விவாதிப்பதற்காக சிறப்புக் கூட்டம் ஒன்று அழைக்கப்படவுள்ளதாக இஸ்லாமிய மாநாட்டு ஸ்தாபனத்து உறுப்பு நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகி இருக்கும் யூகோஸ்லாவியா பற்றிய சர்வதேச மாநாட்டிற்கு முன்னதாக இந்தக் கூட்டம் அழைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சேர்பியன் ஆக்கிரமிப்பை எதிர்த்து முறியடிப்பதான முயற்சியின் துணை புரிவதற்கு மேலும் ஒரு முனைப்பான நடவடிக்கைகளில் ஐ. நா. சபை பணியாற்ற வேண்டுமென்றும் அந்நாடுகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்க அதிபர் தேர்தலில்

# பில் வெற்றியடைவார் லண்டனில் நம்பிக்கை

இவ்வருடம் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் யார் வெற்றிபெறுவார் என்று லண்டனில் இப்போது தொடக்கம் பந்தயங்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரியவருகின்றது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பில்கிளிங்டனே வெற்றி பெறுவார் என லண்டனில் பெரிதும் நம்பப்படுகிறது.

அர்க்கின்சாஸ் மாநிலத்தின் கவர்னரான பில்கிளிங்டன் இன்று முக்கியத்துவம் பெற்று வருகிறார். 1980 இல் இருந்து இன்றுவரை, எந்தவொரு ஜனநாயகக்கட்சிவேட்பாளருக்கும் இல்லாத ஆதரவும், செல்வாக்கும் பில்கிளிங்டனுக்கு உள்ளதாய் தெரியவருகிறது.

லண்டனில், கிளிங்டன் வெற்றி பெறுவார் என20,000 டாலர் வரை மக்கள் பந்தயம் பிடித்துள்ளனர். அதேசமயம் புஷ் வெற்றி பெறுவார் என 10 டாலருக்கேனும் எவரும் பந்தயம் பிடிக்கவில்லை.

சி என். என் செய்தி ஸ்தாபனம் நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் கிலிங்டன் 56 வீதத்தையும், ஜோர்ஜ் புஷ் 37 வீதத்தையும் பெற்றுள்ளனர்.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை தலைமைத்துவத்தில் இருந்து புஷ் தவறி விட்டதாய் கிளிங்டன் கண்டனம் தெரிவித்துள்ளார் எனவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## கடனுதவி பற்றி அக்கறை

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கு அமெரிக்கா கடனுதவி வழங்க முன்வந்துள்ளது பற்றி மத்தியகிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அக்கறை காட்டும். பாலஸ்தீனியர்கள் சிரத்தை காட்டுகின்றனர்.

இக்கடனுதவி சரியான நிபந்தனைகளின் பேரில் வழங்கப்படா விட்டால் அது பேச்சுவார்த்தைகளுக்கு உதவாதென அவர்கள் தெரிவித்தனர்.

# ஈழநாதம்

## பாணின் போஷாக்கை கூட்ட தயாரிப்பாளர் நடவடிக்கை

(நமது நிருபர்)
பாணிலுள்ள போஷாக்கின் அளவினை அதிகரிக்கும் நோக்குடனும் தேசிய சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும் யாழ்.மாவட்டத்தில் பாணைத் தயாரிக்கும் போது குறிப்பிட்ட வீதத்தில் குரக்கன் மாவும் கலப்பதென நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

யாழ் மாவட்ட நுகர்வோரின் நன்மை கருதி பாணினது தரம், விலை விநியோகம் ஆகியவற்றில் காணப்படும் சீரின்மையை நிவர்த்தி செய்யும் முகமாக கடந்த 12 ஆம் திகதி விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட செயலகத்தில் கூடிய சகல பாண் உற்பத்தியாளர்களும் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

### தீர்மானங்கள் பின்வருமாறு:

★ சகல பாண் உற்பத்தியாளர்களும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கத்துவம் பெறல் வேண்டும். அங்கத்துவம் பெறாதோர் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். இதன் மூலம் தரம், விலை, விநியோகம் ஆகியவற்றில் ஒழுங்குமுறை பேணப்படுவது உறுதிசெய்யப்படும் புதிய பேக்கரிகள் அமைக்கப்படுவதாயினும் உறுப்புரிமை பெற்று முன் அனுமதி பெறல் வேண்டும்.

★ தேசிய சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும் பாணின் போஷாக்கினை அதிகரிக்கும் நோக்குடனும், ஒரு மூடை மாவுக்கு அரைக்கிலோ குரக்கன்மா எனும் விகிதத்தில் கலந்து தயாரிக்கப்படுதல் வேண்டும்.

★ 350 கிராம் தரமான பாணின் சில்லறை விலை ரூபா 7.50 எனத் தீர்மானிக்கப் பட்டது.

★ பாண் உற்பத்தியாளர் விபரம் பாணின் நிறை, விலை, ஆகியவற்றைக் கொண்ட யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அறிவித்தல், பேக்கரி, விநியோக வண்டிகள். விற்பனை நிலையங்களிலும் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும் இதன் மூலம் பொதுமக்கள்

## வீரவேங்கைகள் நினைவு உதைபந்தாட்ட போட்டி

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கனை பில்லா, வரன் விளையாட்டுக் கழகம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரை வீர வேங்கைகள் பில்லா, வரன், செந்தூரன் நினைவாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தியது.

இப் போட்டியில் இறுதிச் சுற்றில் விளையாடிய அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக ஏ அணி முதலாம் இடத்தையும்- முல்லைத்தீவு விளையாட்டுக் கழக ஏ அணி இரண்டாம் இடத்தையும் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக பி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந் நிகழ்வில் வன்னிப் பிராந்திய கடற்புலிகளின் தளபதி திரு. தேவா அவர்களும், வன்னிப்பிராந்திய கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஆதவன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திலீபன் ஞாபகார்த்த இலக்கிய அறிவுப் போட்டி

வன்னி மாவட்டப் பாடசாலைகளிடையே இலக்கிய அறிவுப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சி லெப். கேணல் திலீபனின் தியாக மரணத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு செப்டெம்பர் பதினெட்டாம் திகதி அன்று, வன்னி மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும்.

நிகழ்ச்சிகள் பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக இடம் பெறவுள்ளது. கவிதை, கட்டுரை, பேச்சு மூன்று விடயங்களில் நடைபெறும்.

பாடசாலைகளிடையே நடைபெறும் லெப். கேணல் திலீபனின் ஞாபகார்த்த வீர அஞ்சலிக் கூட்டத்தில் மேற்படி நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப் படவுள்ளன.

## அனாதை சிறுவருக்கு உதவ ஜேர்மன் நிறுவனம் திட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் வாழும் அனாதைச் சிறுவர்களுக்கென ஜேர்மனி நாட்டிலிருந்து வெளிவரும் "மண்" கலை இலக்கிய சமூக மாத சஞ்சிகை நிறுவனம் உதவித் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த முன்வந்துள்ளது. ஜேர்மனியில் வாழும் தமிழர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி மேற்படி உதவித்திட்டம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் வசதியாக யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் அனாதைச் சிறுவர் இல்லங்களின் பெயர், இடம், வங்கிக்கணக்கு விபரம் போன்ற தகவல்கள் சேகரிக்கப் பட்டு வருகிறது.

இவ் விபரங்களை மேற்படி அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மிக விரைவில் இவ் உதவித் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட இருக்

## சுகாதார பயிற்சிநெறி

(உரும்பராய்)
கோப்பாய், உரும்பராய் பிரதேசத்திற்குட்பட்ட பிரிவுகளுக்கான ஆரம்ப சுகாதார சேவைக்கான பயிற்சிநெறி வகுப்புக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் சுகாதார பணிமனையில் ஆரம்பமானது இப்பயிற்சி நெறிக்கு கோப்பாய் சுகாதார அதிகாரி கே. வருணநாதனும், உரும்பராய் சுகாதார அதிகாரி பி. காசிநாதனும் இணைந்து நடாத்துகிறார்கள் இப்பயிற்சி வகுப்புக்கள் தினமும் காலை 8.30 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1 மணி வரை இடம்பெறும். எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் பயிற்சி நெறி முடிவடையும். இப்பயிற்சி நெறியில் 35 சுகாதார தொண்டர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [03]

## அனிடா ஹில்லுக்கு பாராட்டு

(சான்பிரான்சிக்கோ)
உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெறவிருந்த நபரொருவர் பாலுணர்வு சேட்டைகளுக்குத் தன்னை வற்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டை பயமின்றி பகிரங்கப்படுத்திய அனிடா ஹில் என்பவரை அமெரிக்காவின் பார் கவுன்சில் எனப்படும் சட்டத்தரணிகள் அமைப்பு கௌரவித்துள்ளது

இது தொடர்பாக இடம் பெற்ற கூட்டத்தில் சுமார் 1800 சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர் இதில் அமெரிக்க அதிபர் பதவிக்கு போட்டியிடும் பில் கிளிண்டனின் பாரியார் ஹிலாரி கிளிண்டன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது

ஒக்லஹொமா நீதி நிலையத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் அனிடா ஹில் கிரைன்ஸ் சொமஸ் என்பவருக்கு எதிராக செனட் சபை விசாரணைக் குழுவில் புகார் செய்திருந்தார்என்பதும் சொமஸ் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றார் என்பதும் தெரிந்ததே.

## உறியடி உற்சவம்

(நமது நிருபர்)
கோப்பாய் வடக்கு கொழுவியம்பதி ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பதினொரு நாட்கள் நடைபெறும் உற்சவத்தின் பத்தாம் நாளாகிய எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உறியடி உற்சவம் இடம்பெறவுள்ளது. பதினொராம் நாள் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

## ஆப்கான் தலைநகரை விட்டு மக்கள் சிதறி ஓட்டம்

(காபூல்)
அழகிய காபூல் நகரம் என்று ஒரு காலத்தில் கூறப்பட்ட ஆப்கானிஸ்தானின் தலைநகரம் இன்று அலங்கோலமான நிலையில் உள்ளது. அங்குள்ள மக்கள் திக்குத்திசை தெரியாமல் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

ஹிஸ்பி இஸ்லாமிய கட்சியினர் காபூல் நகரம்மீது சரமாரியாக குண்டுகளை வீசித் தாக்கி வருகின்றனர். பாகிஸ்தானின் எல்லை நோக்கி மக்கள் சாரிசாரியாக சென்ற வண்ணம் உள்ளனர்.

இவர்களுக்கு உதவும்படி உலக நாடுகளிடம் ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் கேட்டுக்கொண்டுள்ளது

காபூல் நகரின் பல கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளது. ராக்கட் தாக்குதல்களால் இவை சின்னாபின்னமாகியுள்ளன.

காயமடைந்த மக்கள் மருத்துவ வசதிகள் எதுவுமின்றி பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர். ஆஸ்பத்திரிகள் அத்தியாவசிய மருந்துகள் எதுவுமற்ற நிலையில் காணப்படுகின்றன.

காபூலிலிருந்து அதிகமான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வெளியேறிவிட்டனர்.

## வீரவேங்கை தங்கனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(தென்மராட்சி)
சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் சம்பவமொன்றில் விழுப்புண் பட்டு பின் வீரமரணமடைந்த வீரவேங்கை தங்கனின் புகழுடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக கடந்த புதன்கிழமை மட்டுவில் சோமாஸ்கந்த சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது

வீரவேங்கை தங்கனிற்கு பெருந்தொகையான மாணவர்களும், பொதுமக்களும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பொன்னம்மான் வீடமைப்புத் திட்டப் பகுதியில் கறுப்புக்கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. பொதுமக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இதில் தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. புரட்சியும் தென்மராட்சி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. கோபாலும் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

(35)

### நியமனம்

பாடசாலைகளை வழங்குவதற்காக நியமனம் பெற்ற அனைவரையும் இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாக கிளிநொச்சி பிரதேச கல்வித் திணைக்களத்திற்கு வருமாறு பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வட-கிழக்கு

யப்பட்டது.

அடிப்படை மனித உரிமைகள் மீறல் சட்டத்தின் கீழ் தொடரப்பட்டிருக்கும் இவ் வழக்கில், அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர் டபிள்யூ. குணசேகரா ஆஜராகிறார்.

புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த

## தமிழ்நாடு அரசிற்கு 25 கோடி தேவையாம்

(சென்னை)
தமிழகத்தின் கரையோர மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசு விசேட உதவி வழங்க வேண்டும் எனவும் அ. தி. மு. கவின் ராஜ்ய சபை உறுப்பினர் எஸ் முத்துமணி ராஜ்ய சபாவில் பேசும் போது கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில், எல்லையோர மாநிலங்களுக்கான அந்தஸ்தை தமிழகத்திற்கு வழங்க வேண்டுமெனவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இருபத்தைந்து கோடி ரூபாவை விசேடமாக ஒதுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

### காரைநகர்

மாட்டங்கள் அதிகரித்து காணப்படுகின்றது.

பலாலியிலிருந்து காரைநகர் நோக்கி இவை ப[illegible]டவைகள் சென்று திரும்பியதை அவதானிக்க முடிந்தது,

நேற்று மாலையில் உலங்கு வானூர்தி ஒன்று மாதகல், திருவடி நிழல், பொன்னாலை கரையோரப்பகுதியை மிகஉயரப் பறந்த நிலையில் நோட்டமிட்டுச் சென்றது.

### குடாநாட்டின்

ச்சியான கலிபர் தாக்குதல்களும் நடாத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் பதற்றமடைந்த நிலையில் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்து கொண்டனர்.

ஆயினும் இத்தாக்குதல்களினால் எதுவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை.

இதேவேளை மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முற்

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி (நடராசா)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று மாலை சிவபதமெய்தினார். இன்று காலை அன்னாரது இல்லத்தில் மரணச்சடங்குகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. செல்வராசா

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். [சி-4914]

## சென்றது நாலாண்டு!

மாவட்டத்தில் நடைமுறைப் கொண்டுவரப்பட இருக்
படுத்தப்பட உள்ளது. இதற்கு கிறது. (க)


## முக்கிய அறிவித்தல்

எமது கழகத்தின் வளர்ச்சிக்காக 15.08 1992 அன்று அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது. அதிர்ஷ்டம் பார்க்கும் திகதியும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆரம்பமாகும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

சென். தோமஸ் வி.க.
மாதகல்

(சி/4915)



## புத்தூக்கி (Refresher)

மென்பானம், புதிய சுவை, சர்வதேச தரத்திற்கு நிகரானது. தர ஆய்வின்பின் உங்கள் கரங்களை வந்தடைகின்றது, சற்று சீர்தூக்கிப் பாருங்கள் புத்தூக்கியின் ஒவ்வொரு துளியும் இனிமை நிறைந்த தேன்துளி! தமிழீழத்தில் முதற்தடவையாக காற்று ஊட்டப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றது! இவ்விளவேனிற் காலத்தில் துடிப்புடன் பருகுங்கள் !!

**புத்தூக்கி மென்பானம்**
தித்திக்கும் (10) பத்து சுவைகளில்
கிடைக்கின்றது.

அருகில் உள்ள கடைகளில் புத்தூக்கி பெயர் சொல்லி கேட்டு வாங்குங்கள்.

**புத்தூக்கி**
தமிழீழ தேசிய தயாரிப்புகளை வாங்கி பலனடைவீர்.

ஏக விநியோகஸ்தர்:
**இனிமை -**
**மென்பான விநியோகஸ்தர்**
54A, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு :
(செனித் ஜோ. எக்.)

(3023)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும் இதன் மூலம் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளையாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர்சங்கத்திற்கு உரியநடவடிக்கைக்காக அனுப்பி வைக்க முடியும்.

★ சுகாதார விதிமுறைக்கேற்ப மூடப்பட்ட பெட்டிகளிலேயே பாண் விநியோகம் செய்யப்படல்வேண்டும். கடைகளிலும் மூடப்பட்ட பெட்டிகளிலேயே வைக்கப்படல் வேண்டும்.

★ மேற் குறிப்பிடப்படும் நியதிகளுக்கேற்ப பாண் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும்முகமாக தனிப்பட்ட ரீதியாக பாணை வீடுகளுக்கு நேரடியாகவோ அல்லது வழி வியாபாரிகள் மூலமாகவோ விநியோகம் செய்யப்படுவது தடைசெய்யப் பட்டுள்ளது.

இவற்றை யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க கண்காணிப்புக் குழு இம் முடிவுகளை அமுல் நடாத்தி கண்காணிக்கும். மீறுவோர்மீதான நடவடிக்கைக்கு காவற்றுறையினரின்ஒத்துழைப்பைக்கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

சகல பாண் உற்பத்தியாளரும் மேற்படி தீர்மானங்களை செயற்படுத்துவதற்குஒத்துழைக்குமாறு மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

## பயிற்சி நெறி ஆரம்பம்

(வவுனியா)

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறி வவுனியாவில் ஆரம்பமாகியுள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா மாவட்டச் செயலாளர் கே. சிவஞானத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கடந்த ஜூலைமாதத்தில் இப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உற்சவம் இடம்பெறும்.

### பெருமாற்றங்கள்

தார்.

கடந்தவாரம் வடக்கு, கிழக்கிற்கு புதிய தளபதிகள் நியமிக்கப்பட்டதும்அவர்கள்பதவியேற்க முன்னரே சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் ஆலோசனை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பின்போதுவடக்கு - கிழக்கு எல்லைப்புறங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதெனவும், கிழக்கில் இராணுவ ரோந்துகளை மட்டுப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியது தெரிந்ததே.

### வீரச்சாவு

தல் நடாத்தினர். இத்தாக்குதலில் இயக்கவேலை சம்பந்தமாகச் சென்ற போராளியான வீரவேங்கை நதீஸ் (தீரக்குட்டி, சுதாகரன்; கோளவில் வடக்கு, அக்கரைப்பற்று), ஆதரவாளரான அழகையா ஜீவானந்தம் (மாங்கேணி) ஆகிய இருவரும் வீரச்சாவடைந்தனர்.

இவ்விருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பாதிக்கப்பட்ட

உயர் அதிகாரிகள் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இவ்உதவிகள் கிடைக்க இருப்பதாக கூறப்படுகிறது

இவ் உதவிகள் அனைத்தும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை அலுவலகங்களினூடாகவே வழங்கப்பட இருக்கிறது.கிழக்கு மாகாணத்தில் நிலைமைகள் தொடர்ந்தும் சீரற்று இருப்பதால் இவ் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களிற்கு கிடைப்பதை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் மேற்படி நிறுவனத்திடம் நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முற்பகல் 10.40 மணியளவில் யாழ் நகர் மீது கடுமையான கலிபர் தாக்குதலை நடாத்தினார்கள். இதே சமயம் நண்பகலில் யாழ் நகரை நோக்கி எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலினால் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பரீட்சை நிலையத்தின் மீதும் சன்னங்கள் பட்டன.

மேல்மாடியில் இருந்த பரீட்சை மண்டபம் கீழ்த்தளத்திற்கு மாற்றப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்தினுள் படையினரால் நடாத்தப்பட்ட தாக்குதலால் யாழ். நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மினிபஸ் ஒன்றின் கண்ணாடிகள் சேதமடைந்தன சில கடைகளில் இருந்த பொருள்களும், ஓடுகளும் சேதமடைந்தன.

குடியிருப்புகள் மேல் நடாத்தப்பட்ட தாக்குதல்களினால் கரையோரப் பகுதிகளில் பதற்றம் நிலவியது இத் தாக்குதல்கள்நள்ளிரவுவரைஇடையிடையே நடை பெற்றவண்ணம் இருந்தன. (24) (21) (க) (ச)

### நாடு

குளம், மருக்காரம்பழை ஆகிய இடங்களில் இந்த அகதி முகாம்கள் அமைக்கப்பட உள்ளது.

இதே வேளை தமிழகத்திலிருந்து மேலும் நூற்று முப்பது தமிழர்கள் விமானம் மூலம் திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

### அரச

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் மேற்படி புதிய நிர்வாக சேவைத்திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட இருப்பதாகவும் இத்திட்டம் முதற்கட்டமாக வடமத்திய மாகாணப் பகுதியிலேயே பரீட்சார்த்தமாக அமுல்படுத்தப்பட இருப்பதாகவும் கொழும்பில் இருந்து இறுதியாகக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. (க)

## சென்றது நாலாண்டு!
## விழியைத் திறக்கின்றோம் விடியவில்லைஉனைக்காண



தோற்றம்
06-12-1964

மறைவு
18-08-1988

திதி
19-08 1992

**நவரட்ணம் விக்கினேஸ்வரன் (விக்னா)**

எம் முகத்தில் நீர் ஓட
எம்மை விட்டுச் சென்றுவிட்டாய்
உன் பிரிவை மீட்டு விட்டால்
எம் வாழ்வில் குறையேது
உன் வரவை எதிர்பார்த்து
தினம் விழியைத் திறக்கின்றோம்
நாலாண்டு ஆனாலும்
நாம் உன்னைப் பிரியவில்லை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி-4916)

## உள் வந்த, வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

18.08.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5266

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்;-

26-5505, 26-6628, 41-9995, 26-4657, 24-2359, 24-4504 24-5127, 24-9938, 41-8875, 28-159, 42-4126, 24-521, 26-4393, 27-6821.